1973 மார்ச் 2]

திரு. எம். சுரேந்திரன் : நகர பஸ்களிலே மட்டுமல்லாமல் மற்ற இடங்களிலே ஓடுகின்ற பஸ்களிலேயும்கூட எக்ஸ்பிரஸ் அல்லாத பஸ்களிலே ஓவர் லோட் ஏற்றுகிறார்கள். அதற்கு அரசு அனுமதித்து இருக்கிறதா? அதைப் பார்த்து தனியார் பஸ்களிலேயும் ஓவர்லோட் ஏற்றுகிறார்களே, இதையெல்லாம் கவனிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பயணிகளை ஏற்ற மறுக்கிறார்கள் என்ற குறையைவிட ஏராளமாக ஏற்றுகிறார்கள் என்ற குறையை நாம் பொறுத்துக் கொள்ளலாம்.

திரு. ஏ. எம். இராஜா : நெரிசலான நேரங்களில் கூட்டத்தைத் தவிர்ப்பதற்கு டிரெய்லர் பஸ்களை அதிகமாக விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டிரெய்லர் பஸ்கள் மக்களுக்குப் பயனளிக்காது. அதைத் தவிர இதர பஸ்கள் செல்வதற்கும் அவற்றினால் கஷ்டம் ஏற்படுகிறது. மேலும் அவை குறைந்த வேகத்தில்தான் செல்ல முடியும். Mass Rapid Transit அதாவது, அண்டர்கிரவுண்ட் சிஸ்டம் கொண்டுவரக்கூடிய நிலைமை ஏற்பட்டாலொழிய சென்னை மாநகரத்தில் நிரந்தரமான பரிகாரம் காணுவது கடினமாக இருக்கும்.

திரு. எம். ஏ. லத்தீப் : புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கின்ற அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகம் எந்த இடத்திலே வைக்கப்பட்டிருக்கிறது? எந்த எந்த மாவட்டங்களை உட்படுத்தி அது செயல்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அண்ணா போக்குவரத்துக் கழகம் சேலம், தர்மபுரி, வட ஆற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறது. சேலத்திலேதான் அதனுடைய தலைமை அலுவலகம் அமைக்கப்பட்டிருக்கிறது. கடந்த பிப்ரவரி 15-ம் தேதியன்றுதான் அது துவங்கப்பட்டிருக்கிறது. அரசாங்க போக்குவரத்துத் துறையிலே ஏற்கனவே ஓடிக்கொண்டிருந்த 45 வழித்தடங்களை அவர்கள் நடத்தி வருகிறார்கள். அது நல்ல முறையிலே நடந்துவருகிறது.

பிராட்வே-பெரியபாளையம் வழித்தடம்

***218. வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வழித்தடம் எண் 137 பேருந்தினை பெரியபாளையத்திலிருந்து மூக்கரம்பாக்கம் வரை நீட்டிக்கும் திட்டம் அரசு ஆய்வில் உள்ளதா?

[1973 மார்ச் 2

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 10—1—1973 முதல் வழித்தடம் எண் 137ஐ (பிராட்வே-பெரியபாளையம்) முக்கரம்பாக்கம் வரை நீட்டிக்கப் பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இந்தக் கோரிக்கையை ஏற்று உடனடியாக நீட்டித்தமைக்கு நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே அந்த வண்டி வழியிலேயே நின்றுவிடுகிறது. ஆகவே, புதிய வண்டிகளைப் போடுவதற்கு ஏற்பாடு செய்ய துறை முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கோரிக்கைகளுக்கு ஒரு எல்லை எப்பொழுதுமே இருக்காது என்பதைத்தான் இது காட்டுகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Periyapalayam is a pilgrim and tourist centre. By extending the bus route to Mukkarambakkam will not the people at Periapalayam lose their terminal facilities. Have the Government received any complaints from the pilgrims?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதுவரையிலே எந்தப் புகாரும் வரவில்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இதைப் புகாராக எழுப்ப வேண்டாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த 137-ஆம் நம்பர் பஸ் பெரியபாளையத்திலிருந்து முக்காம்பாக்கம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்றாலும், பஸ் பாதி வழியில் நின்றுவிட்டால் பிரயோசனமில்லாமலிருக் கிறது. எனவே கோரிக்கைமேல் கோரிக்கை என்பதல்ல. குறையை அரசும் அமைச்சரும் முன்வந்து தீர்க்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பாதி வழியிலே நிற்பதைக் கட்டாயமாக சரிக்கட்ட போக்குவரத்துக் கழகமே நிச்சயமாக முன்வரும். அதில் ஆட்சேபணையில்லை. ஆனால் புதிய பஸ்ஸாக விட வேண்டு மென்று அங்கத்தினர்கள் கேட்டால், புதிய பஸ்களைப் போட்டுவிட்டு, பழைய பஸ்களைக் கொண்டுபோய் எங்கே நிறுத்துவது என்ற பிரச்னை எழும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன யோசனை, சிரமைப்புப் பணியைச் செவ்வனே முடிக்கப் பெரிதும் பயன்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.